இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 132 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 06 – சனிக்கிழமை 21 டிசம்பர் 2024 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 132 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 06 - Saturday 21 December 2024 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

# புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த அமித்ஷாவைக் கண்டித்து கழகத்தினர் ஆர்ப்பாட்டம்!

## தமிழ்நாடு முழுதும் நடைபெற்றது! இலட்சக்கணக்கானோர் திரண்டு கண்டன முழக்கம்!

**சென்னை, டிச. 21-**

**நாடாளுமன்றத்தில் அரசியல் நிர்ணய சபையால் அரசமைப்புச் சட்டம் ஏற்கப்பட்டதன் 75 ஆண்டுகள் நிகழ்வையொட்டி நடைபெற்ற விவாதத்தின் நிறைவில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசுகையில், புரட்சியாளர், சட்ட மேதை அம்பேத்கரை அவமதிக்கும் விதத்தில் பேசியது நாடு முழுதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. கண்டனக் குரல் எழுந்துள்ளது. கழகத்தின் சார்பில் தமிழ்நாடு முழுதும் நேற்று முன்தினம் அமித்ஷாவைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஆர்ப்பாட்டத்தில் கழகத்தினர் இலட்சக்கணக்கானோர் திரண்டு கண்டன முழக்கமிட்டனர்.**

நாடாளுமன்றத்தில் பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, “அம்பேத்கர்... அம்பேத்கர் என முழக்கமிடுவது தற்போது ஃபேஷன் ஆகிவிட்டது என்றும் அதற்குப் பதிலாக கடவுளின் பெயரை இவ்வளவு முறை உச்சரித்திருந்தால் சொர்க்கத்தில் அவர்களுக்கு இடம் கிடைத்திருக்கும்” என தரம் தாழ்ந்து விமர்சித்தார்.

### எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கண்டன முழக்கம்

அமித்ஷாவின் பேச்சு அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்தது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பொங்கி எழுந்தனர். பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்.ஸின் ஊது குழலாகச் செயல்படும் அமித்ஷா, ஒன்றிய உள்துறை அமைச்சர் பொறுப்பிலிருந்து உடனடியாக விலகிட வேண்டும் என்று முழக்கமிட்டனர்.



நாடாளுமன்றத்தில் அண்ணல் அம்பேத்கரை இழிவுபடுத்திப் பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து, சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமையில் நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர். தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ்.முருகன், ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன் நாகநாதன், பகுதிச் செயலாளர்கள் மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம் உள்பட ஏராளமானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றத்தின் வெளியிலும் காங்கிரஸ், தி.மு.கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அண்ணல் அம்பேத்கரின் படத்தினை ஏந்தி, “அம்பேத்கரை அவமதித்த அமித்ஷாவே பதவி விலகு” என முழங்கினர்.

நாடாளுமன்ற இரு அவைகளும் இரண்டு நாட்களாக முடங்கின.





ஒன்றிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து திண்டுக்கல் பேருந்து நிலையம் முன்பு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகம் மற்றும் மாநகரக் கழகத்தின் சார்பில் மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ., தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தலைமைச் செயற்குழு உறுப்பினர் தண்டபாணி, மாவட்ட துணைசெயலாளர்கள் நாகராஜன், பிலால் உசேன், பொருளாளர் சத்தியமூர்த்தி, மாநகர செயலாளர் இளமதி ஜோதிபிரகாஷ், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை உட்பட நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

மேலும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பேச்சைக் கண்டித்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிடுகையில், “அதிக பாவங்களைச் செய்பவர்கள்தான் புண்ணியத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டும், நாட்டைப் பற்றியும், மக்களைப் பற்றியும் அரசியல் சட்டத்தின் பாதுகாப்பு பற்றியும் கவலைப்படுவோர் புரட்சியாளர் அம்பேத்கர் பெயரைத்தான் சொல்வார்கள்” எனக் கண்டித்திருந்தார்.

### தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

மேலும் தலைமைக் கழகம் சார்பில் நேற்று முன்தினம் (19.12.2024) வெளியிட்ட அறிவிப்பில்,

“இந்திய அரசமைப்புச் சட்டத்தை வடிவமைத்த சட்டமேதை புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் 19.12.2024 அன்று காலை 11.30 மணியளவில் தமிழ்நாடு முழுதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும்” என தலைமைக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டது.

தலைமைக் கழக அறிவிப்பையடுத்து புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த அமித்ஷாவைக் கண்டித்தும், அவர் பதவி விலக வலியுறுத்தியும் சென்னை உட்பட தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

‘கண்டிக்கின்றோம் கண்டிக்கின்றோம் அம்பேத்கரை இழிவு செய்த அமித்ஷாவைக் கண்டிக்கின்றோம்’ என முழக்கமிட்டனர். பதவி விலகு ‘பதவி விலகு பாவக்காரன் அமித்ஷாவே பதவி விலகு! பாதுகாப்போம் பாதுகாப்போம் பாதகர்களிடமிருந்து அரசியல் சாசனத்தை பாதுகாப்போம்!’ ‘மன்னிப்புக்கேள் மன்னிப்புக்கேள் அமித்ஷாவே மன்னிப்புக்கேள்’ எனவும் தி.மு.க.வினர் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.. கொலைகார பா.ஜ.க.வே உனக்கு அம்பேத்கர் என்றால் இளக்காரமா? சர்வாதிகாரி அமித்ஷாவே உனக்கு அம்பேத்கர் என்றால் அவமானமா? எனவும் தி.மு.க. ஆர்ப்பாட்டத்தில் கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

அறிவித்த ஒரு மணி நேரத்தில் கழகத்தினர், பொதுமக்கள் என தமிழ்நாடு முழுதும் ஆங்காங்கு திரண்டு, புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த அமித்ஷாவைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் இலட்சக்கணக்கானோர் பங்கேற்றனர்.



இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்த சட்டமேதை, புரட்சியாளர் அம்பேத்கரை ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவமதித்து பேசியுள்ளார். இதனைக் கண்டித்து திராவிட முன்னேற்றக்கழகம் சார்பில் நேற்று முன்தினம் (19.12.2024) காலை தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற வேண்டும் என தலைமைக்கழகம் அறிவிப்பிற்கிணங்க சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி திமுக சார்பில் மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி சைதாப்பேட்டை கலைஞர் பொன்விழா வளைவு அருகில் சைதை மேற்கு பகுதி திமுக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி தலைமையில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம்.ஸ்ரீதரன் பகுதி அவைத் தலைவர் களக்காடி எல்லப்பன், துணை செயலாளர்கள் ஆர்.ரமேஷ், த.சம்பத், கவிதா, கௌதமன், வி.பி.ஜானகிராமன் சைதை சாதிக் ஆகியோர் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

---

அண்ணல் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பதவி விலக வலியுறுத்தி

# நாடாளுமன்ற வளாகத்தில் “இந்தியா” கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!

## காங்கிரஸ் - தி.மு.க. - கூட்டணி எம்.பி.க்கள் விண்ணதிர கண்டன முழக்கம்!

**புதுடெல்லி, டிச. 21-**

**அண்ணல் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வலியுறுத்தி, நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

சட்ட மாமேதை அம்பேத்கரை அவமதித்துப் பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷா மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், அவர் பதவி விலக வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இந்த விவகாரம் தொடர்பாக, நாடாளுமன்ற இரு அவைகளும் கடந்த 2 நாட்களாக முடங்கியுள்ளன.

இந்நிலையில், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வலியுறுத்தி, நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நாடாளுமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலை எதிரே நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், மக்களவை எதிர்க் கட்சித்தலைவர் ராகுல்காந்தி, வயநாடு எம்.பி. பிரியங்கா, மக்களவை திமுக குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை தி.மு.க. குழுத்தலைவர் திருச்சி சிவா உள்ளிட்ட ‘இந்தியா’ கூட்டணி எம்.பிக்கள் நீல நிற உடை அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அம்பேத்கரை அவமதித்த அமித்ஷா மன்னிப்புக் கேட்டு, பதவி விலக வேண்டும் என தமிழில் முழக்கமிட்டனர்.

இதையடுத்து, பா.ஜ.க. கூட்டணி கட்சிகளின் நடவடிக்கையை கண்டித்து ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தின் மாடத்தின் மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, அண்ணல் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சரை பிரதமர் மோடி பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்றும் அவர்கள் ஆவேசமாக முழக்கமிட்டனர்.

### பா.ஜ.க.எம்.பிக்கள் அத்துமீறல்!

இதனிடையே, நாடாளுமன்ற வளாகத்தில் பா.ஜ.க. எம்.பிக்கள் அடியாட்களைப் போன்று அத்துமீறிய செயல்களின் வீடியோ காட்சிகளை காங்கிரஸ் கட்சி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளது. ஜனநாயக முறையில் ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள், நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது, அங்கு வந்த பா.ஜ.க. எம்.பி.க்கள் அராஜக முறையில் நடந்து கொண்டதாக காங்கிரஸ் தலைவரும், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

தொடர்ச்சி 2ஆம் பக்கம்



அண்ணல் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அம்பேத்கர் சிலை முன்பு இந்தியா கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, காங்கிரஸ் எம்.பி, பிரியங்கா காந்தி உள்ளிட்ட எம்.பி.க்கள் கலந்துகொண்டு கண்டன முழக்கங்கள் எழுப்பினர்.